## ஏழைகளின் தசமபாகம்.

1986ம் ஆண்டு நான் சேந்தமங்கலம் யூனியனில் 100 – கிராம ஊழியம் நடத்த சென்றபொழுது, ஒரு வீட்டில் ஜெபகூட்டத்தில் செய்தி கொடுக்க அழைத்தார்கள். ஜெபம் முடிந்த பின்பு ஒரு தாயார் ஜெபிக்க வீட்டிற்கு அழைத்தார்கள். சென்றிருந்தேன். இனிப்பு வழங்கினார்கள். ஜெபித்து முடித்துவிட்டு வரும்பொழுது, தன்னுடைய பையிலிருந்து 1 கட்டு சில்லரை காசுகளை ஊழியத்திற்கு கொடுத்தார்கள். நான் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு, நான் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்தேன். கர்த்தரைத் துதித்துவிட்டு, நம்முடைய ஊழியர்களிடம், காசுக்களை எண்ணச் சொல்லி ரசீது போட்டேன். அந்தப் பணம் ரூ 21.95 இருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். பின்பு அதை மறந்துவிட்டு விட்டு, வேறு வேலையில் ஈடுபட ஆரம்பித்தேன்.

மறுநாள் காலையில், கிராமங்களை சுற்றிப் பார்வையிட புறப்பட ஆரம்பித்தேன். அப்பொழுது பள்ளிக்கூடம் அருகில் மரத்தடியில் ஒரு அம்மாள் 5 பைசா மிட்டாய் போட்டு விற்றுக் கொண்டிருந்தார்கள். அந்த அம்மாவை நான் கவனித்துப் பார்த்த பொழுது, நேற்று ரூ 21.95 காணிக்கை தந்தது. அந்த அம்மா தான் என்று கண்டு கொண்டேன். என் உள்ளம் திடுக்கிட ஆரம்பித்தது. அன்றாடு பாடுபட்டு, வேலை செய்து கிடைக்கிற சொற்ப வருமானத்தில் தசமபாகம் எடுத்து கிராம ஊழியத்திறகு காணிக்கை கொடுத்ததைப் பார்த்தபொழுது என் உள்ளம் உடைந்து போனது. நன்றியுடன் கர்த்தரைத் துதித்தேன்.

## தனக்கு கடன் இருந்தும் ஊழியத்தை தாங்குதல்.

சேந்தமங்கலம் முகாமில் ஒரு வாலிப சகோதரன் மிகவும் உற்சாகத்தோடு, 100 – கிராம ஊழியருக்கு உணவை பொறுப்பெடுத்து கவனித்துக் கொண்டார்கள். நான் ஏராளமாக வருமானம் வரும் சகோதரன் என நினைத்துக் கொண்டேன். ஆனால் விரும்புவோர் முகாமை முடித்துவிட்டு வரும் பொழுது, அவருடன் பேசிக் கொண்டிருந்தேன் அப்பொழுது தான் தன்னுடைய கடன் பிரச்சனையை குறித்து சொன்னார். மிகவும் ஆச்சரியப்பட்டேன். தன்னுடைய வாழ்க்கையில் எவ்வளவு கடன் இருந்தாலும் கர்த்தருடைய ஊழியத்தில் எவ்வளவு உற்சாகம் காட்டுகிறார் என்பதை உணர முடிந்தது. அல்லேலூயா.

## கிராம ஊழியத்திற்கு 10 மெக்கபோன் காணிக்கை

1986 பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் அலுவலகத்திலிருந்து வெளியூருக்கு ஊழியத்திற்குப் புறப்பட்டேன். அப்பொழுது எங்கு போவதென்று தெரியவில்லை. ( எனக்கு ஒரு சகோதரன் 5 மெக்காபோன் ஊழியத்திற்கு தர விரும்புவதாகவும், தேவைதானா என்றும் கொஞ்ச நாட்களுக்கு முன் கடிதம் எழுதியிருந்தார். நான் மெக்காபோன் என்றால் தகரத்தில் செய்திருக்கும்) விலை ரூ 10 இருக்கும் என்று நினைத்துக்கொண்டேன். இந்த சகோதரனைப் போய் பார்த்து விட்டு வரலாம் என தேவனால் வழிநடத்தப்பட்டேன்.

திருச்சியிலிருந்து, திருச்செங்கோடு வழியாக மாங்குட்டுப் பாளையம் என்ற கிராமத்தை வந்தடைந்தேன். அங்கு சரியாக அந்த சகோதரனை சந்திக்க முடிந்தது. அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். இன்று தான் நான் வீட்டிலிருக்கிறேன். கொஞ்ச நாட்களாக ஊரில் இல்லை. அதிலும் கொஞ்ச நேரத்தில் புறப்பட்டு விடுவேன் என்றார். அ த் து ட ன் நாங்கள் நாங்களும் எங்கள் ஊழியர் பால் செல்லையா அவர்களோடு, உபவாச ஜெபத்தில் மெக்கபோன் யாருக்கு வேண்டுமோ அவர்களைக் கொண்டு வாரும் என்று 3 நாளைக்கு முன் பாரத்தோடு ஜெபித்தோம் என்றார்கள். ஏனெனில் உங்களிடமிருந்து பதில் எனக்கு கிடைக்க வில்லை என்று வருத்தப்பட்டுக் கூறினார். இப்படிக் கூறிக்கொண்டே ஒரு மெக்கபோனை எடுத்துக்காட்டி, இது உங்கள் ஊழியத்திற்கு வேண்டுமா என்றார். நான் பயந்து போனேன். எங்களுக்கு தேவைதான். ஆனால் எங்களால் இது வாங்க முடியாது என்றேன். (ஏனெனில், கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு சகோதரன் Hand Mike என்று சொல்லிக்கொண்டு இதைத் தான் ரூ 800 க்கு சேலத்தில் வாங்கினதைப் பார்த்தேன்)

ஆனால் அந்த சகோதரன் விலைக்கு அல்ல உங்கள் ஊழியத்திற்கு காணிக்கை என்றார். அப்படியானால் சரி என்றேன். உடனே அவர் 5 மெக்கபோன் கொடுத்தார். இன்னும் 5 அடுத்த மாதம் தருகிறேன் என்று கூறி, பின்பு 10 மெக்காபோன் தந்துவிட்டார். இவர் பள்ளிக் கூடங்களில் Educational Filim காட்டுபவர் என்றும் தன்னுடைய ஊரில் தங்களுடைய ஒரு குடும்பம் மட்டும் இந்துவிலிருந்து இரட்சிக்கப்பட்டிருப்பதாகவும் தனக்கு கிடைக்கும் வருமானத்தில் பத்தில் ஒரு பாகத்தை சேகரித்துகொடுத்ததாகவும் கூறினார். **தேவனுக்கே மகிமை.**